# கின்டர் காடனில் பெற்றோர்களுடன் பேச்சுவார்த்தை செய்வது
**(பெற்றோருக்கும் மேலும் பாதுகாவலருக்குமான துண்டுப் பிரசுரம்)**

**கின்டர் காடன் 1ம் திகதி தை மாதம் 2008 இல் இருந்து ஆரம்பப் பாடசாலையின் ஒரு பகுதி அதோடு அங்கு அதிகாரபூர்வமாக பள்ளிக்கூடப் படிப்பிற்கு அத்திவாரம் போடப்படுகிறது. பொதுவாக மாநிலத்திற்குரிய ஆரம்பப் பாடசாலையின் எல்லா விதிமுறைகளும் கின்டர் காடனுக்கும் செல்லுபடியாகும். கல்வி நிர்வாக சபை 1ம் திகதி புரட்டாதி மாதம் 2008 இல் இருந்து பாடசாலை அறிக்கையை அமைப்பதைப் பற்றிய விதிமுறைகளை (அறிக்கையின் ஒழுங்கமைப்பு / LS 412.121.31) புதிதாக பிரகடனம் செய்திருக்கிறார்கள்.**

**கின்டர் காடனில் இப்படி செய்யப்படும்:**

1. **கின்டர் காடனில் அறிக்கை (ரிப்போட்) கொடுக்கப்படுவதில்லை. அறிக்கைக்குப் பதிலாக பிள்ளை கட்டாயக் கல்வியை பூர்த்தி செய்வதற்கு பொறுப்பாக இருப்பவருடன் பேச்சுவார்த்தை நடைபெறும்.**

2. **ஒவ்வொரு கின்டர் காடன் வருடத்திலும் குறைந்தது இரண்டு தடவை கின்டர் காடனுக்குப் பொறுப்பான ஆசிரியர் பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் பிள்ளையின் முன்னேற்றத்தையும், படிக்கும் தன்மையையும் பற்றி பேச்சுவார்த்தை நடாத்துவார். எப்போ கின்டர் காடன் ஆசிரியரினதும் அதோடு பெற்றோர் அல்லது பாதுகாவலரினதும் அபிப்பிராயப்படி பேச்சுவார்த்தை செய்வதில் ஒரு அர்த்தம் இருக்கிறது என்று கண்டால், அப்போ பேச்சுவார்த்தை இடம்பெறும். கின்டர் காடன் ஆசிரியர் நிர்ணயிக்கப்பட்ட சந்திப்பை (இடத்தையும், திகதி அதோடு நேரத்தையும்) ஏற்பாடு செய்வதற்கு பொறுப்பு.**
   **பெற்றோர் கின்டர்காடன் ஆசிரியர் ஒத்துக்கொண்டால் இரண்டாவது பேச்சுவார்த்தையை தவிர்க்கலாம்.**

3. பெற்றோர் அல்லது பாதுகாவலர் பேச்சுவார்த்தை நடைபெற்றதென்பதை அல்லது அவர்கள் இரண்டாவது பேச்சுவார்த்தையை தவிர்க்க விரும்பினால், அதை கையெழுத்திட்டு உறுதிப்படுத்த வேண்டும்.

4. இந்த குறிப்பிட்ட படிவங்கள் விஷேஷ காகிதக் கோவையில் வைத்திருக்கப்படும். இவை பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் கின்டர் காடன் வகுப்பு முடிவில் கையளிக்கப்படும்.

5. அத்தாட்சிக்காக இந்தப் படிவங்களின் பிரதிகளை பாடசாலை நிர்வாகம் பத்திரப்படுத்தி வைத்திருப்பார்கள்.